**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**

**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**

https://www.evastaliniasacademy.in/

**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# புதிய நாடாளுமன்றம் இந்தியருக்குப் பெருமை

## பிரதமர் மோடி

**புது தில்லி, மே 26:** ஞாயிற்றுக்கிழமை (மே 28) திறக்கப்படும் புதிய நாடாளுமன்றக் கட்டடம், ஒவ்வொரு இந்தியரையும் பெருமைப்பட வைக்கும் என புதிய வளாகத்தின் விடியோவை வெளியிட்டு பிரதமர் நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய நாடாளுமன்ற வளாகத்தின் இரு அவைகளிலும் உறுப்பினர்களுக்கு இடப் பற்றாக்குறை நிலவுகிறது. இதைக் கருத்தில்கொண்டு புதிய நாடாளுமன்றக் கட்டடம் கட்டுவதற்கான தீர்மானம் இரு அவைகளிலும் நிறைவேற்றப்பட்டு அதற்கான கட்டுமானப் பணிகள் கடந்த 2020-ஆம் ஆண்டு டிசம்பரில் தொடங்கி நடைபெற்று வந்தன.

64,500 சதுர மீட்டர் பரப்பளவில் கட்டப்பட்டுள்ள புதிய நாடாளுமன்ற கட்டடத்தின் கட்டுமானப் பணிகள் முழுமையாக நிறைவடைந்துள்ளன. வரும் ஞாயிற்றுக்கிழமை (மே 28) நடைபெறவுள்ள நிகழ்ச்சியில் புதிய நாடாளுமன்றக் கட்டடத்தைப் பிரதமர் மோடி நாட்டுக்கு அர்ப்ப



கின்றனர். எதிர்க்கட்சிகள் தங்களது முடிவை மறுபரிசீலனை செய்து, புதிய நாடாளுமன்றக் கட்டடத் திறப்பு விழாவில் பங்கேற்க வேண்டும் என அவர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், புதிய நாடாளுமன்றக் கட்டடத்தின் உள்கட்டமைப்பு வசதிகளைக் காட்சிப்படுத்தியுள்ள விடியோவை பிரதமர் மோடி ட்விட்டரில் வெள்ளிக்கிழமை பகிர்ந்தார். அந்தப் பதிவில், 'புதிய நாடாளுமன்றக் கட்டடம், ஒவ்வொரு இந்தியரையும் பெருமைப்பட வைக்கும். தனித்துவமான அந்தக் கட்டடத்தின் உள்





தற்போதைய நாடாளுமன்றத்தின் அருகே அமைந்துள்ள புதிய நாடாளுமன்ற கட்டடம். (வலது) புதிய நாடாளுமன்றத்தில் உள்ள மக்களவையின் தோற்றம்.

வடுதுறை ஆதீனம் சார்பில் உருவாக்கப்பட்ட இந்தச் செங்கோல், பிரிட்டிஷாரிடமிருந்து ஆட்சி பரிமாற்றத்தின் அடையாளமாக முதல் பிரதமர் பண்டித ஜவாஹர்லால் நேருவிடம் வழங்கப்பட்டது என்பது நினைவுகூரத்தக்கது.

**அனைவருக்குமான வளர்ச்சியை சாதித்த பிரதமர்:** பிரதமர் மோடி தலைமையிலான மத்திய பாஜக அரசு ஆட்சிப் பொறுப்பேற்று வெள்ளிக்கிழமையுடன் 9 ஆண்டுகள் நிறைவடைந்தன.

இதையொட்டி, தில்லியில் செய்தியாளர்களைச் சந்தித்த பாஜக தலைவர் ஜெ.பி.நட்டா கூறுகை

## பொதுநல மனுவை விசாரிக்க உச்சநீதிமன்றம் மறுப்பு

**புது தில்லி, மே 26:** புதிய நாடாளுமன்றக் கட்டடத்தை குடியரசுத் தலைவர் திறந்து வைக்கும் வகையில், மக்களவைச் செயலகத்துக்கும் மத்திய அரசுக்கும் உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட பொதுநல மனுவை விசாரிக்க உச்ச நீதிமன்றம் வெள்ளிக்கிழமை மறுத்துவிட்டது.

தில்லியில் கூடுதல் இடவசதியுடன் கட்டப்பட்டுள்ள புதிய நாடாளுமன்றக் கட்டடத்தை பிரதமர் மோடி ஞாயிற்றுக்கிழமை (மே 28) திறந்துவைக்கவுள்ளார். ஆனால்,

அமைப்புமுறையின் தலைவர் என்பதால், புதிய நாடாளுமன்றக் கட்டடத்தை குடியரசுத் தலைவர்தான் திறந்துவைக்க வேண்டும்.

அரசமைப்புச் சட்டத்தின் 79-ஆவது பிரிவின்படி, நாடாளுமன்றமானது குடியரசுத் தலைவரையும், இரு அவைகளையும் (மக்களவை, மாநிலங்களவை) உள்ளடக்கியதாகும். குடியரசுத் தலைவர், நாடாளுமன்றத்தின் ஒருங்கிணைந்த அங்கமாவார்.

அத்தகைய உயரிய முக்கியத்துவம் வாய்ந்த குடியரசுத் தலைவரை

அப்போது, அரசமைப்புச்சட்டப் பிரிவு 32-இன் கீழ், இந்த மனுவை விசாரிக்க விரும்பவில்லை என்று குறிப்பிட்ட நீதிபதிகள், 'இத்தகைய மனுவை நீங்கள் (மனுதாரர்) ஏன் தாக்கல் செய்துள்ளீர்கள் என்பதை அறிவோம். என்றபோதும், நாங்கள் அபராதம் விதிக்கவில்லை. அதற்காக, நீதிமன்றத்துக்கு நீங்கள் நன்றிதான் தெரிவிக்க வேண்டும். இந்த விவகாரத்தை விசாரிப்பது நீதிமன்றத்தின் பணியல்ல. அரசமைப்புச் சட்டத்தின் 79-ஆவது பிரிவை, புதிய நாடாளுமன்ற திறப்

ணிக்க உள்ளார்.

புதிய நாடாளுமன்றக் கட்டடத்தை குடியரசுத் தலைவர் திறக்க வேண்டும் என எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன. இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி திறப்பு விழாவைப் புறக்கணிக்கப் போவதாக காங்கிரஸ், இடதுசாரிகள், திமுக உள்ளிட்ட 19 எதிர்க்கட்சிகள் கூட்டாக அறிவித்துள்ளன.

எதிர்க்கட்சிகளின் விமர்சனங்களுக்கு மத்திய அரசு சார்பில் அமைச்சர்கள் பதிலளித்து வரு

காட்சிகளை இந்த விடியோ உங்களுக்கு வழங்கும். உங்களுடைய கருத்துகளை இந்த விடியோவில் உங்கள் குரல் மூலம் பதிவு செய்து பகிர வேண்டும். 'எனது நாடாளுமன்றம்; எனது பெருமை' என்கிற ஹேஷ்டேக்குடன் பதிவிட மறக்காதீர்கள்' எனக் குறிப்பிட்டுள்ளார்.

புதிய நாடாளுமன்றக் கட்டடத்தில் அவைத் தலைவரின் இருக்கை அருகே தமிழகத்தைச் சேர்ந்த 'செங்கோல்' நிறுவப்பட உள்ளது குறிப்பிடத்தக்கது. திருவா

யில், 'பிரதமர் மோடி தலைமையிலான இந்தியா அனைத்துக் கட்ட முன்னேற்றங்களையும் எட்டியதோடு அனைவருக்குமான வளர்ச்சி உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தொழில்நுட்பங்கள் மற்றும் எண்மவழியை கூடுதலாகப் பயன்படுத்தி அரசு இயந்திரத்தில் வெளிப்படைத்தன்மை நிறுவப்பட்டுள்ளது. கடந்த 9 ஆண்டுகளாக தான் மேற்கொண்ட அனைத்து முடிவுகளிலும் தேச நலனை மட்டுமே பிரதமர் முன்னிலைப்படுத்தியுள்ளார்' என்றார்.

புதிய கட்டடத்தை குடியரசுத் தலைவர்தான் திறந்துவைக்க வேண்டும் என்ற எதிர்க்கட்சிகள் வலியுறுத்தலால், சர்ச்சை நீடித்து வருகிறது.

இதனிடையே, புதிய நாடாளுமன்றக் கட்டடத்தை குடியரசுத் தலைவர் திறந்துவைக்கும் வகையில், மக்களவைச் செயலகத்துக்கும் மத்திய அரசுக்கும் உரிய உத்தரவைப் பிறப்பிக்கக் கோரி, ஜெய சுகின் என்ற வழக்குரைஞர் சார்பில் உச்சநீதிமன்றத்தில் பொது நல மனு தாக்கல் செய்யப்பட்டது.

அதில், 'நாட்டின் முதல் குடிமகன் என்பதுடன் நாடாளுமன்ற

அவமதிக்க மக்களவைச் செயலகமும் மத்திய அரசும் முயல்கின்றன.

புதிய நாடாளுமன்ற கட்டட திறப்பு விழாவுக்கு அவருக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை. நாட்டின் ஜனநாயகத்தை காக்க, இந்த விஷயத்தில் உச்சநீதிமன்றம் தலையிட வேண்டும்' என்று கோரப்பட்டது.

இந்த மனு, நீதிபதிகள் ஜெ.கே.மகேஷ்வரி, பி.எஸ்.நரசிம்மா ஆகியோர் அடங்கிய விடுமுறை கால அமர்வு முன் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வந்தது.

புடன் இணைத்துப் பார்க்க முடியாது' என்றனர்.

இதையடுத்து, மனுவை திரும்பப் பெற அனுமதிக்க வேண்டும் என்று ஜெய சுகின் கோரினார். அப்போது, மத்திய அரசு சார்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா, 'மனுவை திரும்பப் பெற அனுமதிப்பது, உயர்நீதிமன்றத்தை அணுக வாய்ப்பளித்து விடும். அதை நீதிமன்றம் கருத்தில் கொள்ள வேண்டும்' என்றார்.

இதைத் தொடர்ந்து, மனுவைத் தள்ளுபடி செய்வதாக நீதிபதிகள் தெரிவித்தனர்.

**ARTICLE 32:**

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 32வது பிரிவு டாக்டர் பி.ஆர். அம்பேத்கரால் இந்திய அரசியலமைப்பின் 'இதயம் மற்றும் ஆன்மா' என்று விவரிக்கப்பட்டுள்ளது. எந்தவொரு அடிப்படை உரிமைகளையும் மீறும் பட்சத்தில் உச்ச நீதிமன்றத்தை அணுகுவதற்கு குடிமகனுக்கு உரிமை அளிக்கிறது. இது அரசியலமைப்பு தீர்வுக்கான உரிமை என்றும் அழைக்கப்படுகிறது.

Article 32 of the Constitution of India Dr. B.R. Described by Ambedkar as the 'heart and soul' of the Indian Constitution. Entitles the citizen to approach the Supreme Court in case of violation of any fundamental rights. It is also known as the right to constitutional remedy.

# தமிழகத்தில் மேம்பாட்டுத் திட்டங்களில் முதலீடு

## ஜப்பான் நிறுவனங்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அழைப்பு

**சென்னை, மே 26:** உற்பத்தித் துறைகளில் மட்டுமல்லாது, மேம்பாட்டுத் திட்டங்களிலும் முதலீடு செய்ய முன்வர வேண்டும் என்று ஜப்பான் நிறுவனங்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அழைப்பு விடுத்தார்.

சிங்கப்பூர் பயணத்தை முடித்துக்கொண்டு ஜப்பான் நாட்டின் ஒசாகா நகரத்துக்கு வியாழக்கிழமை அவர் சென்றார். ஜப்பான் நாட்டைச் சேர்ந்த வெளிநாட்டு வர்த்தக அமைப்புடன் இணைந்து நடத்தப்பட்ட முதலீட்டாளர்கள் மாநாட்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின், வெள்ளிக்கிழமை கலந்து கொண்டார். இந்த மாநாட்டில் ஜப்பானை சேர்ந்த சுமார் 80 நிறுவனங்களின் மூத்த நிர்வாக அலுவலர்கள் கலந்து கொண்டனர். இதில், முதல்வர் ஸ்டாலின் ஆற்றிய உரை:

மெட்ரோ ரயில் திட்டம், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்துக்காக ஜப்பான் நாட்டு நிதியுதவியைப் பெறுவதற்காக, கடந்த 2008-ஆம் ஆண்டு டோக்கியோ நகருக்கு வந்திருந்தேன்.



கடந்த 2010-ஆம் ஆண்டில், ஜப்பான் மற்றும் தமிழ்நாடு தொழில் துறையின் கூட்டுக் கூட்டம் சென்னையில் நடைபெற்றது. அப்போது, தமிழகத்தின் துணை முதல்வராக இருந்தேன். ஜப்பான் நாட்டின் பொருளாதாரம்,வர்த்தகம்,தொழில் துறை அமைச்சர் மசாயூகி நாஷிமா, சென்னைக்கு வந்து கூட்டத்தில் கலந்து கொண்டார்.

அந்தக் காலகட்டத்தில் ஜப்பான் நாட்டைச்சேர்ந்த840நிறுவனங்கள், இந்தியாவில் தொழில் தொடங்கின. அதில், தமிழ்நாட்டில் மட்டும் 170 நிறுவனங்கள் தங்களது தொழிற்சாலையை நடத்தி வந்தன.

**ஒத்துழைப்பு தேவை:** தமிழக அரசின் சார்பில், உலக முதலீட்டாளர் மாநாடானது, சென்னையில் அடுத்த மாதம் நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டின் கூட்டு நாடாக ஜப்பான் பங்கேற்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். இந்திய சந்தைக்குள் நுழையும் ஜப்பான் நிறுவனங்களின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இந்தியாவுக்குள் ஜப்பானிய முதலீடுகளுக்கு உகந்த மாநிலமாக தமிழ்நாடு விளங்குகிறது.

தெற்காசியாவிலேயே முதலீடுகளை ஈர்க்க உகந்த மாநிலமாக தமிழ்நாட்டை உயர்த்த அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறோம். கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் இதுவரை ரூ.5,596 கோடி முதலீட்டுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்களை ஜப்பான் நிறுவனங்கள் செய்துள்ளன.

ஜப்பான் நிறுவனங்கள் பெரும்பாலும் உற்பத்தி சார்ந்த துறைகளில் மட்டுமே முதலீடு செய்ய விருப்பம் கொள்கின்றன. இந்தத் தன்மையை சற்றே விரிவுபடுத்தி, மேம்பாட்டுத் திட்டங்களிலும் முதலீடு செய்ய வேண்டுமென அழைப்பு விடுக்கிறேன்.

மாநிலத்தின்பல்வேறுமவாட்டங்களில் புதிய தொழில் பூங்காக்களை அமைத்து வருகிறோம். மேலும், மருத்துவ சாதனங்கள் பூங்கா, உணவுப் பூங்காக்கள்,மின் வாகனங்களுக்கான பூங்கா,மின்னணுவியல் உற்பத்தித் தொகுப்புகள், ஒருங்கிணைந்த ஆடை மற்றும் ஜவுளிப் பூங்கா, தோல் காலணிகள் எனப் பல்வேறு துறைசார்ந்தஉள்கட்டமைப்புகளை வலுப்படுத்தி வருகிறோம். இந்தத் துறைகளில் ஜப்பான் நாட்டின் முதலீடுகளை வரவேற்கிறோம்.

தொழில் மற்றும் பொருளாதார மேம்பாட்டுக்கு சிவப்புக் கம்பளம் விரித்து தமிழ்நாடு வரவேற்கிறது என்றார் முதல்வர் ஸ்டாலின்.

இந்த நிகழ்வில், தொழில் துறை அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா, தொழில் துறை கூடுதல் தலைமைச் செயலர் எஸ்.கிருஷ்ணன், தொழில் வணிக ஆணையர் சிஜி தாமஸ் வைத்யன், தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் வே.விஷ்ணு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# சிவிங்கிப் புலிகள் இறப்பு எதிரொலி: நிபுணர் குழு அமைத்தது மத்திய அரசு

புது தில்லி, மே 26: இந்தியாவில் சிவிங்கிப் புலிகள் (சீட்டா) மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்ட திட்டத்தை அவ்வப்போது ஆய்வு செய்து, கண்காணிப்பதற்காக 11 பேர் கொண்ட உயர்நிலை நிபுணர் குழுவை மத்திய அரசு அமைத்துள்ளது.

மத்திய பிரதேச மாநிலம், குனோ தேசிய பூங்காவில் அறிமுகம் செய்யப்பட்ட 20 சிவிங்கிப் புலிகளில், 3 சிவிங்கிப் புலிகள் அடுத்தடுத்து உயிரிழந்தன. அத்துடன், 3 சிவிங்கிப் புலி குட்டிகளும் இறந்த நிலையில், மேற்கண்ட நடவடிக்கையை மத்திய அரசு எடுத்துள்ளது.

**அழிந்து போன இனம்:** உலகிலேயே வேகமாக ஓடக் கூடிய உயிரினமான சிவிங்கிப் புலிகள், ஒரு காலத்தில் இந்தியாவில் அதிக எண்ணிக்கையில் காணப்பட்டன. ஆனால், நாட்டின் பல்வேறு பகுதிகளை ஆண்ட அரசர்கள், ஆங்கிலேய ஆட்சியாளர்கள் உள்ளிட்டோர் பொழுதுபோக்குக்காக அவற்றை பெருமளவில் வேட்டையாடியதால், சிவிங்கிப் புலிகளின் இனமே இந்தியாவில் அழிந்து போனது.

நாட்டில் கடைசியாகக் காணப்பட்ட சிவிங்கிப் புலி, இன்றைய சத்தீஸ்கர் பகுதியில் கடந்த 1947-இல் கண்டறியப்பட்டது. இந்தியாவில் இந்த இனம் முற்றிலும் அழிந்துவிட்டதாக கடந்த 1952-இல் அறிவிக்கப்பட்டது.

**மீண்டும் அறிமுகம்:** இந்நிலையில், இந்தியாவில் சிவிங்கிப் புலிகளை மீண்டும் அறிமுகப்படுத்தும் மத்திய அரசின் லட்சியத் திட்டத்தின்கீழ், நமீபியாவில் இருந்து கடந்த ஆண்டு செப்டம்பரில் 8 சிவிங்கிப் புலிகள் (5 பெண், 3 ஆண்) கொண்டுவரப்பட்டன. அவை, மத்தியபிரதேசத்தின் குனோ தேசியப் பூங்காவில், பிரதமர் மோடியால் திறந்துவிடப்பட்டன. அடுத்தகட்டமாக, தென்னாப்பிரிக்காவில் இருந்து 12 சிவிங்கிப் புலிகள் (7 ஆண், 5 பெண்) கொண்டுவரப்பட்டு, குனோ தேசிய பூங்காவில் கடந்த பிப்ரவரியில் விடப்பட்டன.



**அடுத்தடுத்து உயிரிழப்பு:** இந்தச் சூழலில், 'சாஷா' எனும் பெண் சிவிங்கிப் புலி, சிறுநீரகத் தொற்றால் பாதிக்கப்பட்டு, கடந்த மார்ச் மாதம் உயிரிழந்தது. 'உதய்' என்ற ஆண் சிவிங்கிப் புலி, ஏப்ரலில் இறந்தது. அதன் இறப்புக்கான காரணம் தெரியவில்லை. பின்னர், 'தக்ஷா' என்ற பெண் சிவிங்கிப் புலி, இம்மாதம் இறந்தது.

இனச்சேர்க்கைக்காக, இரு ஆண் சிவிங்கிப் புலிகளின் வாழ்விடத்தில் 'தக்ஷா' திறந்துவிடப்பட்டபோது, அவற்றுக்குள் மோதல் ஏற்பட்டு உயிரிழந்தது.

ஜ்வாலா என்ற பெண் சிவிங்கிப் புலி, குனோ பூங்காவில் கடந்த மார்ச் மாதம் 4 குட்டிகளை ஈன்றிருந்தது. அதில், 3 குட்டிகள் சில தினங்களுக்கு முன் உயிரிழந்தன.

**நிபுணர்கள் கவலை:** சிவிங்கிப் புலிகளின் இறப்பு குறித்து கவலை தெரிவித்து வரும் துறை சார் நிபுணர்கள், அவற்றை பராமரிக்கும் திறனுடன் குனோ தேசிய பூங்கா உள்ளதா? என்ற கேள்வியையும் முன்வைத்துள்ளனர். வேறு பூங்காவுக்கு சிவிங்கிப் புலிகளை இடமாற்றம் செய்யலாம் என்பது அவர்களின் பரிந்துரையாக உள்ளது.

**11 பேர் கொண்ட குழு அமைப்பு:** இந்நிலையில், சிவிங்கிப் புலிகள் திட்டத்தின் ஆய்வு மற்றும் கண்காணிப்புக்காக 11 பேர் கொண்ட உயர்நிலை நிபுணர்கள் குழுவை தேசிய புலிகள் பாதுகாப்பு ஆணையம் (என்டிசிஏ) அமைத்துள்ளது.

உலக புலிகள் கூட்டமைப்பின் தலைமைச் செயலாளர் ராஜேஷ் கோபால் தலைமையிலான இக்குழுவில், ராஜஸ்தான் வனத்துறை முன்னாள் தலைமை பாதுகாவலர் ஆர்.என்.மெஹ்ரோத்ரா, இந்திய வனஉயிரின நிறுவனத்தின் (டபிள்யுஐஐ) முன்னாள் இயக்குநர் பி.ஆர்.சின்ஹா, டபிள்யுஐஐ முன்னாள் பேராசிரியர் பி.கே. மாலிக், டபிள்யுஐஐ ஆராய்ச்சியாளர் காமர் குரேஷி உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளனர்.

2 ஆண்டுகளுக்கு செயல்பாட்டில் இருக்கும் இக்குழு, மாதந்தோறும் குறைந்தபட்சம் ஒருமுறையாவது கூடி ஆலோசனை மேற்கொள்ளும். சிவிங்கிப் புலி திட்டத்தின் செயல்பாடுகள் குறித்தும், சீட்டா வாழ்விடங்களில் சுற்றுச்சூழலுக்கு உகந்த சுற்றுலா நடவடிக்கைகளை அனுமதிப்பது குறித்தும் ஆலோசனைகள் வழங்கும் என்று என்டிசிஏ தெரிவித்துள்ளது.

## சிவிங்கிப் புலிகள் திட்டம் தோல்வியா?

### தென்னாப்பிரிக்க நிபுணர் கருத்து

சிவிங்கிப் புலிகளின் தொடர் உயிரிழப்பு காரணமாக, மறுஅறிமுகத் திட்டம் தோல்வியை நோக்கி செல்கிறதா என்ற கேள்வி பரவலாக எழுந்துள்ள நிலையில், அதற்கு தென்னாப்பிரிக்க வனஉயிரின நிபுணர் வின்சென்ட் வான் டெர் மார்வே மறுப்பு தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்துடன் நெருங்கிய தொடர்புடையவரான அவர், பிடிஐ செய்தியாளரிடம் கூறியதாவது:

இந்தியாவில் சிவிங்கிப் புலிகளின் உயிரிழப்பு எண்ணிக்கை ஏற்கத்தக்க விகிதத்தில்தான் உள்ளது. இனச்சேர்க்கையின்போது பெண் சிவிங்கிப் புலியை ஆண் சிவிங்கிப் புலிகள் கொன்றது நிபுணர்களே எதிர்பாராதது.

ஒரு பெண் சிவிங்கிப் புலி, முதல்முறையாக குட்டிகளை பிரசவிக்கும்போது, அவற்றில் சில இறப்பது வழக்கமானதே.

வேலி அடைப்புகளில் இருந்து, காடுகளுக்குள் சிவிங்கிப் புலிகள் திறக்கப்பட்டு வரும் நிலையில், தங்களுக்கான எல்லை நிர்ணயம் மற்றும் துணை தேடலில் சிவிங்கிப் புலிகளுக்கு இடையே மோதல்கள் நிகழும். இதில் உயிரிழப்புகள் ஏற்படலாம். மேலும், சிறுத்தை, புலி உள்ளிட்ட விலங்குகளுடன் அவை மோதலில் ஈடுபடலாம்.

சிவிங்கிப் புலிகளுக்கான காப்புக் காடுகள் முழுவதும் வேலியிடப்படுவது முக்கியமானது.

மனிதன்-விலங்கு மோதலை தவிர்க்கவும், இரை விலங்குகளின் எண்ணிக்கையை பாரமரிக்கவும், வேட்டை உள்ளிட்ட செயல்களை தடுக்கவும் இது அவசியம். ஆனால், குனோ பூங்கா முழுமையாக வேலியிடப்படவில்லை. அங்கு இரை விலங்குகளின் எண்ணிக்கையையும் மேம்படுத்த வேண்டியுள்ளது. இதற்கான நடவடிக்கையை, இந்திய அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

அதேசமயம், முழுமையாக வேலியிடப்பட்ட ராஜஸ்தானின் முகுந்த்ரா ஹில்ஸ் பூங்காவுக்கு 4-5 சிவிங்கிப் புலிகளை மாற்றலாம் என்றார் அவர்.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

### நாளை புதிய நாடாளுமன்றக் கட்டட திறப்பு விழா

# ரூ.75 சிறப்பு நாணயத்தை வெளியிடுகிறது மத்திய அரசு

**புது தில்லி, மே 26:** புதிய நாடாளுமன்றக் கட்டட திறப்பு விழாவையொட்டி, அந்தக் கட்டட உருவம் பொறிக்கப்பட்ட 75 ரூபாய் சிறப்பு நாணயத்தை மத்திய அரசு வெளியிடவுள்ளது.

தில்லியில் புதிய நாடாளுமன்றக் கட்டடத்தை பிரதமர் நரேந்திர மோடி ஞாயிற்றுக்கிழமை (மே 28) திறந்துவைக்கவுள்ளார்.

இதைக் குறிக்கும் வகையில்,75 ரூபாய் சிறப்பு நாணயம் வெளியிடப்படவுள்ளதாக மத்திய நிதியமைச்சகத்தின்கீழ் செயல்படும் பொருளாதார விவகாரங்கள் துறை வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிவிக்கையில் கூறப்பட்டுள்ளது.

சுமார் 35 கிராம் எடையுள்ள அந்த நாணயத்தின் ஒரு பக்கத்தின் நடுவில், அசோகத் தூணில் சிங்கத் தலைகள் சின்னம் இடம் பெறும்.

இருபுறமும் 'பாரத்' என தேவநாகரி எழுத்து வடிவிலும், இந்தியா என ஆங்கிலத்திலும் எழுதப்பட்டிருக்கும்.

கீழே, ரூபாய் சின்னத்துடன் '75' எண் இடம்பெற்றிருக்கும். மற்றொரு பக்கத்தில், புதிய நாடாளுமன்றக் கட்டட உருவம் பொறிக்கப்பட்டு, நடப்பாண்டை குறிக்கும் வகையில் '2023' எண் இடம்பெறும் என்று அந்த அறிவிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இந்திய சுதந்திரத்தின் 75-ஆவது ஆண்டு கொண்டாடப்பட்டு வரும் நிலையில், புதிய நாடாளுமன்றக் கட்டடம் திறக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.



குடியரசுத் தலைவர் மாளிகை, நிதி அமைச்சக வளாகம் ஆகியவற்றின் பின்னணியில் புதிய நாடாளுமன்ற கட்டடம்.



புதிய நாடாளுமன்ற வளாகத்தில் மாநிலங்களவையின் உள்புறத் தோற்றம்.



புதிய நாடாளுமன்ற கட்டடத்தின் பக்கவாட்டுத் தோற்றம்.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
https://www.evastaliniasacademy.in/
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் துணையாக மாற வாய்ப்பு

## நிபுணர்கள் கருத்து

ஷெஃபீல்டு, மே 26: செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பமானது, சில வேலையிழப்புகளுக்குக் காரணமாக இருக்கும் அதே வேளையில், மக்களின் தனிப்பட்ட துணையாக மாற வாய்ப்புள்ளதாக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

உலகில் தொழில்நுட்பம் தொடர்ந்து மேம்பட்டு வருகிறது. தொழில்நுட்ப சாதனங்களின் பயன்பாடு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அதிலும், மனிதர்களைப் போலவே இயந்திரங்களையும் சிந்திக்க வைக்கும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் முக்கியத்துவம் பெற்றுள்ளது.



பல்வேறு துறைகளிலும் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதே வேளையில், நவீன தொழில்நுட்பங்கள் மனிதர்களுக்கான வேலைவாய்ப்புகளைப் பாதிக்கும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டு வருகிறது. செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் அறிமுகத்தால் பலர் வேலையிழக்கும் அபாயம் உள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், தொழில்நுட்ப நிபுணர்கள் கூறுகையில், 'நவீன தொழில்நுட்பத்தின் காரணமாக வேலையிழப்பு ஏற்படும் அபாயமானது தொழிற்புரட்சி காலத்தில் இருந்தே காணப்படுகிறது. செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்திலும் அதே அபாயம் காணப்படுகிறது. செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தால் சிலர் வேலையிழக்கும் அபாயம் உள்ளது.

அதே வேளையில், வெகு சிலர் மட்டுமே அதனால் பாதிக்கப்படுவர். மாறாக, அந்தத் தொழில்நுட்பமானது மனிதர்களுக்குப் பல்வேறு பலன்களை வழங்க வாய்ப்புள்ளது. அந்தத் தொழில்நுட்பமானது மனிதர்களின் தனிப்பட்ட துணையாக மாற வாய்ப்புள்ளது. பல்வேறு விவகாரங்களை செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் மூலமாகவே மக்களால் பெற்றுவிட முடியும்.

மனிதர்களின் வாழ்க்கைமுறையை செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் எளிமைப்படுத்தும். பிரிட்டன் உள்ளிட்ட சில நாடுகளில் அறிவியல்-தொழில்நுட்பப் பாடப் பிரிவு சார்ந்த தொழிலாளர்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. அதனால், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் வேலையிழப்புக்குப் பெரிய அளவில் வழிகோலாது. மாறாக, மக்களின் பணிச் சுமையை அத்தொழில்நுட்பம் பெருமளவில் குறைக்கும்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில் தரவுப் பாதுகாப்பு மிகவும் முக்கியமானது. அத்தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கு அதிக தரவுகள் தேவைப்படும் என்பதால், அவ்வாறு சேமிக்கப்படும் தரவுகள் தவறாகப் பயன்படுத்தப்பட வாய்ப்புள்ளது.

இணையவழி குற்றச் செயல்களும் மற்றொரு சவாலாக உள்ளது. செயற்கை நுண்ணறிவு சார்ந்த தளத்தை சிலர் ஊடுருவி தரவுகளைத் திருட வாய்ப்புள்ளது. இதுபோன்ற அபாயங்களில் இருந்து காத்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம். முக்கியமாக, தரவுப் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்' என்றனர்.

# இந்திய பயணம் ஆக்கபூர்வமாக அமைந்தது

**இஸ்லாமாபாத், மே 26:** ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டத்தில் பங்கேற்க இந்தியாவுக்கு மேற்கொண்ட பயணம் ஆக்கபூர்வமாக அமைந்ததாக பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் பிலாவல் புட்டோ தெரிவித்துள்ளார்.

இந்தமாதத்தொடக்கத்தில்கோவாவில் இந்தக் கூட்டம் நடைபெற்றது. இதில் பாகிஸ்தான் சார்பில் பிலாவல் புட்டோ தலைமையிலான குழுவினர் பங்கேற்றனர். கடந்த 2011-ஆம் ஆண்டுக்குப் பிறகு பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் இந்தியாவுக்குப் பயணம் மேற்கொள்வது இதுவே முதல்முறையாக அமைந்தது.

இதில் பேசிய பிலாவல் புட்டோ, ராஜீய ரீதியில் ஆதாயமடைய பயங்கரவாதத்தை ஆயுதமாக பயன்படுத்தக் கூடாது என்று கூறியது இந்தியாவை மறைமுகமாக விமர்சிப்பதாக இருந்தது. அதே நேரத்தில் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரும் பாகிஸ்தான் நடத்தி வரும் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தை மறைமுகமாக

பிலாவல் புட்டோ



கடுமையாக விமர்சித்துப் பேசினார்.

இந்நிலையில், இஸ்லாமாபாதில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சக நாடாளுமன்ற நிலைக்குழுக் கூட்டத்தில் தனது இந்தியப் பயணம் குறித்து பிலாவல் பேசுகையில், 'இந்தப் பயணம் பாகிஸ்தானின் கருத்துகளை இந்தியாவில் எடுத்துக் கூறுவதாக மட்டுமல்லாமல், சர்வதேச அமைப்பான ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பில் வலியுறுத்துவதாகவும் அமைந்தது.

காஷ்மீர் பிரச்னை இந்தியா-பாகிஸ்தான் சம்பந்தப்பட்டது. இதில், பல்வேறு தரப்பினரின் கவலைகளும் பொறுப்புகளும் அடங்கியுள்ளன. ஒட்டுமொத்தத்தில் எனது இந்தியப் பயணம் ஆக்கபூர்வமானதாகவும், நேர்மறையானதாகவும் அமைந்தது.

பாகிஸ்தானின் கருத்துகளை இந்தியாவுக்கு தெரியப்படுத்துவது மட்டும் நமது நோக்கமல்ல. கூட்டத்தில் பங்கேற்ற அனைத்து நாடுகளுக்கும் உணர்த்துவது தான் நமது நோக்கம். அது நிறைவேறியுள்ளது என்றார்.